## மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

வாரம் - 35

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க
- இவை மொழிவளத்தை அதிகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட பயிற்சியாகும்

---

பகுதி 1

1. திருடன் கையும் களவுமாக பிடிபட்டான் என்பதில் கையும் களவுமாக என்பது
   (1) இரட்டைமொழி (2) அடுக்குத்தொடர் (3) இணைமொழி (4) இரட்டைக்கிளவி
2. சக்கரம், தண்டு, தனு, வாள், சங்கு என்பன
   (1) பஞ்சாமிர்தம் (2) பஞ்சாங்கம் (3) பஞ்சாயுதம் (4) பஞ்சகச்சம்
3. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன
   (1) ஐந்திணை (2) ஐங்குரவர் (3) ஐந்திலக்கணம் (4) ஐந்திணை
4. யாரின் துணையுமின்றி தானே தனித்து நின்று பகைவரை வெல்லும் ஆற்றல் மிக்கவன்
   (1) வீரன் (2) அசகாயசூரன் (3) உலோபி (4) மாவீரன்
5. பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வாழ்தல்
   (1) வனவாசம் (2) குருகுலவாசம் (3) அஞ்ஞாதவாசம் (4) மறைதல்

பகுதி 2

**1.** பின்வரும் பாடல்களை படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக

1. சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே முனிவர்களும் சுருதி நான்கும்
   தேடுகின்ற பதம் சிவப்ப திரு நாடு பெற தூது செல்ல வேண்டா
   வாடுகின்ற மட பாவை தன் வரமும் என் வரமும் வழுவா வண்ணம்
   கோடுகின்ற மொழி அவன் பால் எனை தூது விடுக இனி
   1. கிருட்டினன் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
   2. வாடுகின்ற மடப்பாவை என குறிப்பிடப்படுபவர் யார்?

2. உரிமையுடன் தம்பியர் உணர்வு அறியாமையின் அவை கண் உரைத்த மாற்றம்
   பரிபவமோ கேட்டோர்க்கு பரிபவம் என்பது பிறரால் பட்டால் அன்றோ
   கருதில் மற்று எவர்க்கும் ஒவ்வாதோ கண் மலரில் கை படாதோ
   பொரு தொழிலும் கடை நிலத்தில் கிடந்ததே என மொழிந்தான் புகழே பூண்டான்
   1. புகழே பூண்டான் என சிறப்பிக்கப்படுபவன் யார்?
   2. பரிபவம் என்றால் என்ன?
   3. எதனை பரிபவம் ஆகாது என தர்மன் எடுத்துரைக்கின்றான்?

3. பரிவுடன் இவை கூறும் பவன குமாரனை மலர் கை பணித்து நோக்கி
   குருகுலத்தோர் போர் ஏறே குற்றமது பார்க்கும் கால் சுற்றம் இல்லை
   ஒரு குலத்தில் பிறந்தார்கள் உடன் வாழும் வாழ்வினை போல் உறுதி உண்டோ
   இருவருக்கும் வசை அன்றோ இரு நிலம் காரணமாக எதிர்ப்பது என்றான்
   1. பவனகுமாரன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
   2. இரு நிலம் என்பதால் குறிப்பிடப்படுவது யாது?
   3. வீமனின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?